**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.STC.320/2022**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.12**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | தொழில் | : கூலிவேலை |
| தந்தை பெயர் | : வீராசாமி | சமயம் | : |
| கிராமம் | : ஆலம்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 68 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் ஆலம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 2017ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் சத்தியமங்கலம் காவல் நிலையத்தார் விபத்து வழக்கு சம்மந்தமாக பெருங்காப்பூர் காடு அருகே வந்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது சாட்சி கையொப்பம் செய்தேன். போலிசார் விசாரித்தனர்.

**(2. 30.08.2017 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. வந்து பார்த்ததற்கு சாட்சி கையொப்பம் போட்டேன். நான் சொல்லச்சொல்ல போலிசார் தட்டச்சு செய்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. போலிசார் கேட்டதனால் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.